சிலம்பு } திருவள்ளுவர் ஆண்டு ஈஈஅஉ, ஐப்பசி { பரல்
உள } நவம்பர், 1952 { ஈ

ஒப்பில் ஒருவர்

டாக்டர். இரா. க. சண்முகம் செட்டியார்

நகர்

உண்டியும் உடையும் புன்பாட்டின் உடல் உயிராகும். உழைத்தற்கும் உண்டிபெறுதற்கும் உடை இன்றியமையாத தொன்று. அவ்வுடையினை முடையின்றித் தடையின்றி நல்கும் நற்றொழில் நடைபெறு மேனாட்டு 'மாஞ்செஃச்ட்டரோ?' என்று கண்டார் மருளும் வண்ணம் மினிர் கைத்தொழில் நகரம், கோவையாகும். இங்கு மூப்பதுக்கு மேற்பட்ட பஞ்சாலை நூற்பாலை நெசவாலைகள் காணப்படுகின்றன. இம்மூப்பதுக்கு மேற்பட்ட ஆலைகளும் நம் சண்முகனூர் நன்முயற்சியாலும் முன் மாதிரியாலும் பெருகின. இவைகளெல்லாம் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் தோன்றின. இந்நகர் பொன்னகர் போன்று பொலிவுறுகின்றது.

இங்கே கல்வி, மருத்துவம், வாணிகம், கைத்தொழில், ஆட்சி, புலமை, நாவன்மை, பாவன்மை, மொழி, நாடு, நன்னெறி, நலத்துறை, கடவுட்பற்று, வழிபாடு, வணக்கம், வாய்மை, தூய்மை, ஈகை, இன்சொல், ஓகை, ஒற்றுமை, ஒழுக்கம், பண்பாடு, படைத்திறன், பயிற்சி, செழுந்திரு, சான்றாண்மை எல்லாம் நிறைந்திருக்கும் நிலைமை நினைதொறும் நினைதொறும் நீங்கா இறும்பூது ஒங்குவதாகும்.

குடும்பம்

மறப்பரும் சிறப்புமிக்க அறப்பெருநகராம் இக் கோவைமா நகர் நாப்பண், தொன்மை வாய்ந்த நன்மைச் சிற்றார் ஒன்

றுளது. அதன் பெயர் உப்பிலியபாளையம். இவ்வூர் நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் கோவைமாநகருக்கு வெளியே இருந்தது. ஆங்கிலேயர் கோவையை மூன்றுமுறை முற்றுகையிட்டுக் கைப் பற்றினர். பின் நாடு வளம்பெற்றுப் பெருகியது. அக்காலை ஒப்பில் உப்பிலியபாளையமும் நகரோடு ஒன்றுப் நடுவணதாய் விடுங்கு சிறப்போடு வயங்குகின்றது.

கோவையிலிருந்து அவிநாசிக்குச் செல்லும் பெருவழியில் தென்புறத்தில் உப்பிலியரும், வடபுறத்தில் அனுப்பரும் வாழ்ந்து வந்தனர். அக்காரணத்தால் முறையே அவ் இருவூர் களுக்கும் உப்பிலியபாளையம், அனுப்பர்பாளையம் என்னும் பெயர்கள் ஏற்பட்டன.

இவ்வூரில் தாழ்விலாச் செல்வ வாழ்வொடு வாழ்ந்த வணி, கப்பெருமகனர் ஒருவர் உளர். அவர் திருப்பெயர் இராமசாமிச் செட்டியார். இவரே ஒப்பில் ஒருவராம் சண்முகனர்க்குப் பேரனாவர். திருநீற்றுப்பொலிவும், சிவநெறிப்பற்றும், திரு முறை அன்பும், உய்யவழியருளும் மெய்யடியார்கள் காதலும், அறம்புரிதிறமும், பிறவும் தமபோற் பேணிச்செய்யும் வாணிக வளமும், குடும்பமுதன்மையும் மிக்கவர் இவர். வணிகவாய்ப் பின் பொருட்டுக் கோவைப் பெருமனையில் குடியேறினர்.

திருப்பணி

இராமசாமிச் செட்டியாரின் செந்நெறிச் செல்லும் நேர் மையும் சீர்மையும் கண்டு அரசியலார் கோயமுத்தூர்க் கூற்றம் (தாலுகா) திருக்கோவில் அறங்காவற்குழு (தேவத்தானக் கமிட்டி) உறுப்பினராக அமர்வித்தனர். அஞ்ஞான்று அண்மை யிலுள்ள திருப்பேரூரில் காஞ்சிமா நதியில் சோழன்துறை என்னும் படித்துறையினைத் திருப்பணி செய்து அமைத்தனர். அத்திருக்கோவிலில் பல திருப்பணிகள் செய்தமைத்தனர். அங்குத்திருவிழாச் சேவிக்கவரும் அடியார்களுக்குப் பயன்பட ஒருதிருமடமும் அமைத்தனர்.

தாயார் சிரங்கம்மாள் என்னும் அம்மையார் சிவன்பால் அன்பிற் சிறந்து விளங்கும் தவத்திருவினர். திருப்பேரூரில் சிவன் திருப்பணிகள் பலவற்றையும் சிறக்கச் செய்திருக்கின் றார்கள். மேலும் சிவன் புகழ்களையும் சிவனடியார் புகழ்களை யும் செவிமடுத்து இடையறு இன்பெய்தும் பெருவேட்கையும் பேராவ்வமும் உடையர். பேரூரில் சிறுற நிகழும் ஆவணிமூலப் பிட்டுப் பெருவிழாச் சிறப்பினைக் கொண்டாடிப் பெருமகிழ் வெய்தும் பேறுடையார்.

பிறப்பு

இத்தகைய செந்நெறிச் செல்வத் திருக்குடும்பத்தில் நம் சண்முகனார் ஆயிரத்தெண்ணூற்றுத் தொண்ணூற்றிரண்டாம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் பதினேழாம் நாள் (17-10-1892) திருவருள் துணையால் பொருவரும் பிறப்பு எய்தினர். இவரோடு உடன்பிறந்தார் இவருள்ளிட்டு நாற்பொருளும், நானெறியும், நற்றமிழும், பெற்ற தமிழகமும் நானிலம் போற்றும் மேனிலை எய்தி மிக்கு விளங்க நால்வராவர்.

இவர்தம் தந்தையார் திருப்பெயர் கந்தசாமிச் செட்டியார் என்ப. இவரும் பெருந்தகைமை எல்லாம் வாய்ந்த பேராளர். நெடுநாள் வாழும் நிலைமை இன்றேனும் சில்வாழ் நாளில் பயனுர் பல்பணி புரிந்த நயன் சோர் பண்பாளர்.

பெயர்

பெரும்பாலும் பெற்ற பிள்ளைகட்கு உற்ற நற்பெயர் அமைவது பிற்கால வாழ்க்கையின் குறிக்கோள் செறிந்த சிறப்பமை குறிப்பேயாகும். அதுபோல் நம் ஒப்பில் ஒருவர்க்கு அறுமுகப் பெயரிய பண்ணவன் திருப்பெயராம் சண்முகன் என்றே அமைந்தது. இப் பெயர் முருகப்பெருமான் திருப்பெயர். முருகப்பெருமானை நக்கீரனார், "மணிமயில் உயரிய மாரு வென்றிப், பிணிமுக வூர்தி ஒண்செய் யோனு" (புறநானூறு, நுசு) மென்று கூறுகின்றார். மேலும் "முருகொத்தியே முன்னியது முடித்தலின்" என்றும் விளம்புகின்றார். அத்திருப்பெயர்பூண்ட நம் சண்முகனாரும் முன்னியது முடிக்கும் ஆற்றல் இயற்கையிலேயே இளமைதொட்டுக் கொண்டுள்ள பான்மையர்.

படிப்பு

இளமையில் கோயமுத்தூரிலுள்ள இலண்டன் மிசன் உயர்நிலைப் பள்ளியில், கூர்த்த மதியினராய்க் கல்வி பயின்று வந்தனர். இப்பள்ளி இப்பொழுது ஒற்றுமை உயர்நிலைப் பள்ளி என வழங்கப்படுகின்றது. இவர்தம் இளமைப் படிப்புமுறையிலேயே இவர் பிற்காலத்து மேன்மைமிக்க முதல்தர நாவன்மையராய் நிறை புலவராய்த் தோன்றுவார் என்னும் உறுதிசோர் நம்பிக்கைக்கு இடமான தோற்றத்தராய் விளங்கினர்.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பு நிறைவுறுவதன் நடுவே அருமைத் தந்தையார் சிவவுலகு எய்தினர். இந் நேர்வு ஆற்றொணாப் பெருந்துன்புக்குரிய தொன்று. எனினும் தந்தையின் கருமையாம் பேரூர் கனிவளம் படைக்க நனிநிகு செல்வக்கர்,

எவ்வகையிலும் பழக்கமிக்க செவ்வியர். அன்பு அறிவு ஆற்றல் அடக்கம் பணிவு இன்சொல் முதலிய குன்றேயகுணத்தர். அப்பெருந்தகையரால் நம் சண்முகனர் பெருமையொடும் உரிமையொடும் பேணப்பெற்றார். மேலும் கல்வி முதலிய நலமெலாம் ஒல்லும் வகைபெற ஓவாது உதவி ஊக்கினர்.

ஆங்கில இலக்கியம்

உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போது ஆங்கில இலக்கியத்தில் நீங்கா ஆர்வமுற்றிருந்தனர். இவர் பல ஆங்கில நூல்களைக் கசடறக் கற்றுள்ளனர். மாபாரதக்கதை முழுமையும் நன்கு படித்திருந்தனர். தம் ஒய்வு காலங்களில் தமக்கு உள்ளன்புடன் ஓவாது உறுதுணையாக இருந்து கற்பித்துவந்த பேராசிரியர் ஒருவரை இவர் எப்போதும் மறந்ததே இல்லை. அம்மட்டோ தாம் இம்மேனிலை எய்துதற்கு அவர்தம் பெருந்துணையே என்று வாயார வாழ்த்தி நன்றி செலுத்தும் நயனர் நன்னெஞ்சினராய் விளங்குகின்றனர்.

சென்னைப்படிப்பு

ஆயிரத்துத்தொள்ளாயிரத்துப் பத்தாம் ஆண்டு மேற்புலக் கல்வியின் பொருட்டுச் சென்னை வந்து சேர்ந்தனர். அஞ்ஞான்று சென்னையில் மிகவும் பேர்போன கல்லூரியாய் முதன்மைபெற்று விளங்கியது "செல்னைக் கிறித்துவக் கல்லூரி". அக்கல்லூரியைத் திறம்பட நடத்திப் பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்தவர் ஃச்கின்னர் துரைமகனர், அவர் மாணவர்கள் அனைவரையும் கண்ணினும் கருத்தினும் காதல் உயிர்போல் அமைத்துக் கண்காணித்து வருபவர். தம் மக்கள் எனவே கனவினும் நனவினும் கண்ணி ஓம்புபவர். மாணவர் ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பும் விழுமியர். அத் துரைமகனர் அக்கல்லூரியின் மதிப்பு மிக்க முதல்வராவர். ஒப்பிலா உழைப்பும் உண்மையும் திண்மையும் ஊக்கமும் சீரிய நோக்கமும் ஒருங்கமைந்த அத்துரைமகனர் ஒருவராலேயே சீரும் சிறப்பும் பெற்று அன்றும் இன்றும் விளங்குகின்றது.

அத்துரைமகனர் வழியொழுகும் பெரும்பேற்றால் நம் சண்முகனர் நாடு நலமுறப் புரி மக்கள் தொண்டும், கழகமாகச் சேர்ந்து ஒற்றுமையுற்றுச் செய்யும் நற்றிறப்பணியும் நயந்து எளிதாகக் கைக்கொண்டனர். இத்துணை, அவர்தம் பிற்கால வாழ்க்கைக்குப் பெருந்துணையாக விருந்தது.

யாவரையும் வயப்படுத்தும் நாவன்மை படைத்த பெரும் பேச்சாளர் மூவர் எனப் பெயர்பெற்றிருந்தனர். அவருள்

ஒருவர் அன்னிபெசண்டு அம்மையார். அவர்தம் அருந் தொடர்பும் நாவன்மைப் பழக்கமும் நம் சண்முகனார்க்குக் கிட்டியது.

பரிசு

சென்னைமா நகரிலுள்ள எல்லாக் கல்லூரியின் திறமிக்க ஒற்றுமைப் பேச்சாளர் பெரும் போட்டிகளில் எல்லாம் கலந்து மிக எளிதாகவென்று பல பரிசுகளும் பெற்றுள்ளார். கல்லூரிப் படிப்பில் மட்டுமன்றி எல்லாத் துறைகளிலும் எல்லா நற்செய்கைகளிலும் ஆர்வமும், சுறுசுறுப்பும், ஊக்கமும், விடாப் பிடியும், செய்து முடிக்கும் திறனும் உடையவராய்த் திகழ்ந்தனர். இவை எல்லாம் ஃச்கின்னர் துரைமகனார் இயக்கும் நல்வழி இயங்கிய ஏற்றத்தால் அமைந்தன என்க.

பட்டம்

நம் சண்முகனார் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் நன்கு பயின்று ஆயிரத்துத்தொளாயிரத்துப் பதினைந்தாம் (1915) ஆண்டில் இளம் புலவர் (பி.ஏ.) என்னும் எழிற்பட்டம் பெற்று இலங்கினர்.

1915-இல், பட்டம்பெற்றபோது அமிழ்தினும் இனிய தமிழ்நூற்கல்வி ஒரு சிறிதும்உணரா ஒருவராயிருந்தனர். தமிழினிமை, தமிழ்ப்பண்பாடு, தமிழன் உயர்வு, தமிழ் வரலாற்றின் பெருமை முதலியவற்றை அறிய வேண்டுமே என்னும் ஆர்வங் கூட இல்லாதிருந்தனர். அம்மட்டோ அருந்தமிழைப் புறக் கணித்துமிருந்தனர்.

அந்நேரத்து ஆங்கில இலக்கியங்களில் பெரும் புலமை பெற்றிருந்தனர். ஆங்கிலோசாக்ஃசன், கோத்திக் மொழிகளையும் நன்கு கற்றிருந்தனர். மேலும் உல்பிலாசு என்பவர் கோத்திக் மொழியில் வரைந்துள்ள விவிலியமறை மொழி பெயர்ப்பினை விடாமல் பொழுதுபோவதுணராமல் படித்துக் கொண்டேயிருப்பர். ஆனால் திருவள்ளுவர் திருக்குறள் இருக்கும் இடமும் தெரியாது. சாசர் எழுதிய நூல்களை நேசமுடன் கற்பர். இளங்கோ அடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தை உளங் கொளவும் ஒருப்படார்.

கல்லூரிப் படிப்பு முடிந்த பின்னரும் கணக்கற்ற ஆங்கில நூற்களைக் கற்றனர். எண்ணிறந்த ஆங்கில நூல்களை வாங்கித் தமதில்லத்து நூல்நிலையங்களை நிரப்பியுள்ளனர். மருந்துக் கேனும் தமிழ்நூல் ஒன்றிருக்க மறைந்த இடமும் ஆண்டுக் கிடையாது.

சட்டப்படிப்பு

சட்டக்கல்லூரியில் திறம்பெறப் பயின்றனர். சட்டக் கல்லூரி ஒருசாலே மாணவராய்த் திகழ்பவர், திவான்பகதூர் T. M. நாராயணசாமி பிள்ளே M.A., B.L., அவர்கள் ஆவர். 1917-இல், கிறித்துவ இளைஞர் சங்கச் சார்பில் மேற்கலேதேர் அணித்துக் கல்லூரி மாணவர்களின் சொற்போட்டியொன்று நிகழ்ந்தது. அப்போட்டியில் "கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாம் சொல்" என்ற சீரிய முறைப்படி பேசினதோடு உண்மையும், திண்மையும், அறனும், ஆண்மையும், தோற்றமும், மாற்றமும் கண்டார் அனேவர்க்கும் கழிபேருவகை பயந்து நினேதொறும் இறும்பூது நல்கும் எழிலுடையவராயும் இருந்தனர்.

இங்கிலே சண்முகனர்க்குக் கல்வியின்கண் கழிபெருங்காம மீதூர்தலே நல்கிற்று. இதனே நம் செந்தமிழ்ப் பொதுமறை செய்தருளிய திருவள்ளுவ நாயனர் திருப்பாட்டால் உணரலாம். அது வருமாறு :

"தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்." —திருக்குறள், கூகூ

பேரனர் பேருவகை

கோவைமாநகர்க் கிறித்துவ இளைஞர் சங்கத்துத் திறந்த வெளியில் என்றும் கண்டறியாதபடி மக்கள் கூட்டம் பெருகியிருந்தது. இக்கூட்டமிகுதி கண்டு எல்லாரும் வெளியூர் நாவன்மை மிக்க பெரும் பேச்சாளர் யாரோ வருகின்றூர் என்று பொதுவாகப் பெருமக்களும் சிறப்பாக இளைஞர்களும் இடம் போதாவண்ணம் ஈண்டினர்.

ஆங்குச் சொலல்வல்லராய்ச், சோர்விலராய், அஞ்சா நெஞ்சினராய், உண்மைக்கு உயிரையும் கொடுக்கும் உரனுடையாளராய்க், கரியமேனி மேல் வெளியநீறு நிறையஇடும் நீண்ட உருவினராய்ப், புன்முறுவல் பூத்த முகத்தினராய் நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப நவிலும் நாவன்மையராய் ஒருவர் தோன்றினர்; அவர்தாம் நம் சண்முகனாவர்.

அவர் எழுந்து நின்றதும் யாவர் கண்களும் அவரையே நோக்கின. யாவர் செவிகளும் அவர்தம் அரும்பெரும் சொல்லேயே வேட்டன; நெஞ்சம் அச்சொல்லுக்கு இடனுகப் "புலன்கொளுவ மனமுகிழ்த்த சுருள் விரிந்து மலர்ந்தன". ஆங்கிலக் கல்வியிற் பெற்ற வாகை வள்ளல் தம் ஊரில் மன்னுயிர்க்குப் பயன்பெறுமாறு மணியனேய மொழிகளால் கேட்பார்

உள்ளத்து அணி செய்வாராயினர். யாவரும் மகிழ்ந்து வியந்தனர். அவர் விளக்கியது செர்மானியர் முன்னேற்றம்.

ஆங்கிலம் ஒரு சிறிதும் உணரா ஒண்மைப் பேரனூர் அக்கூட்டத்து நாப்பண் யாப்புற வீற்றிருந்து தம் பேரனூர் சொற் பொழிவின் புறத்தோற்றங்களைக் குறிப்பால் நெறிப்பட உணர்ந்து பேருவகை கொள்வாராயினர். தந்தையார் காணவும் கேட்கவும் முந்தைப்பேறு பெற்றிலரேனும் தந்தையின் தந்தையாம் பேரனூர் பேற்றை எல்லாரும் கொண்டாடினூர்.

இது, திருவள்ளுவ நாயனூர் தந்தைக்கும் மகனுக்கும் உரிய கடமைகளை வலியுறுத்தியருளிய வாய்மைத் திருப்பாட்டுக்களா னுணர்க. அவை வருமாறு :

> "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
> முந்தி இருப்பச் செயல்." —திருக்குறள் : கூஎ
>
> "மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
> என்நோற்றான் கொல்லெனுஞ் சொல்." —திருக்குறள் : எo

இதன்படி பெற்று வளர்த்தவனினும் உற்ற நற்றந்தை உயிர் வளர்ப்பாம் ஒருபெரும் கல்விக்குத் துணைசெய்த ஒண்மையனே என்று விளங்குகின்றதன்றே?

மன்றுடி

சென்னையில் சட்டத் தேறுதல் பெற்றுக் கோவைமாநகர் புக்கு மன்றுடி (வழக்குரைஞர்)யாய்ச் சின்னுள் மன்னினர். அவர் நிலைக்கு அவ் இருப்பு ஒத்த ஒன்றாய்த் தோன்றவில்லை. அகன்ற உலகில் விரிந்த மனத்தொடு பெருமக்கள் தொண்டு புரியவே வேட்டனர். வேட்டவாறு விளைவும் நேர்ந்தது.

பொதுத்தேர்தல் வெற்றி

சட்டக் கல்லூரியினின்றும் வெளிப்போந்த வழியாண்டில் அந்நாள் பேர்போன ஆங்கில நாள்வழித்தாளாம் 'இந்து'வின் ஆசிரியர் திரு. கத்தூரிரெங்க ஐயங்காரின் ஒருங்கிய மனத்தெழுந்து ஊக்கிய ஊக்கத்தால் 1920-இல் சென்னை மாகாணச் சட்ட சபைக்கு நீலகிரி மாவட்டப் பொதுத்தொகுதிக்குத் தேரப்படுவோராய் நின்று வெற்றியும் பெற்றனர். விழைந்தாங்குத் தொண்டும் இயற்றினர். அஞ்ஞான்று இவர்தம் அகவை இருபத்தெட்டு. இவர் ஒருவரே நனிமிகு இளைஞர். இத்தேர்தல் முறை 'மாண்டேகு சேம்ஃப் போர்டு சீர்த்திருத்தத்'தின்படி நிகழ்ந்தது.

நகராண்மைக் கழகம்

சட்டக்கல்லூரியில் பயின்றுகொண்டு தம் ஊராம் கோவை மாநகர் நகராண்மை உறுப்பினராய்த்திகழ்ந்தனர். 1920-ஆம் ஆண்டிலேயே துணைத்தலைவராய் மக்கள் மதிக்கத் தொண்டியற்றினர்.

இந்திய சட்டசபை

பேராற்றல் படைத்த பெருந்தகையாளரெல்லாம் பேருலகிற்கேயுரிய பெருந்தொண்டியற்றும் பெற்றியர். அதனால் நம் சண்முகனார் வல்விரைவில் இந்திய சட்டசபை உறுப்பினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆண்டுத் திறமையுடன் பெருந்தலைவர்களும் வியக்கச் செயற்கரிய செய்வாராய்ப் பெருந்தொண்டியற்றினர். ஆண்டு 1923 முதல் 1934 வரை பணிபுரிந்தனர். எல்லாத்துறைகளிலும் நம் சண்முகனார் இணையில் திறலர். ஆயின் பொருளியல் துறையில் ஈடும் எடுப்புமில்லாச் செம்மல். இங்கிலையில் அனைத்துலகும் மருளத் தெருள்சேர் உளத்தராய்ச் சிறந்த தொண்டியற்றினர். தம் அகவை நாற்பதின்கண் துணைத் தலைவராயும் 1933-இல் தலைவராயும் பணிபுரிந்தனர்.

மேல்நாடு சென்றுவரல்

ஆட்சித் துறையின் அறிவுமிக்க அண்ணலாரை ஆட்சியினரே மேனாட்டில் நடக்கும் பயனுடைப் பல்பெருங்கூட்டங்களுக்குப் பன்முறை தெரிந்தெடுத்து அனுப்பியுள்ளார். எல்லா முறைகளிலும் மேனாடுள்ளிட்டு உலகமே வியக்கும் வண்ணம் சொல்லோர் உழுவராய் வெற்றிபெற்றனர். இவர் சென்று மீண்ட மாநாடுகள், ஆத்திரேலியாவில் நடந்த பாராளுமன்ற மாநாடு, செனிவாவில் நடைபெற்ற உலகத்தொழில் மாநாடு, ஆண்டே மீண்டும் நடந்த அகிலதேசக்குழு மாநாடு, 1932-இல் ஆட்டாவாவில் நடந்த ஏகாதிபத்தியப் பொருளியல் மாநாடு முதலியன.

கொச்சி அமைச்சர்

கொச்சி மன்னரின் அன்பான அழைப்புக்கிணங்கி 1935 முதல் 1941 வரை அமைச்சுத் தொழில் பூண்டு பேரும் புகழும் சீரும் சிறப்பும் எய்தினர். இவர் 'தள்ளாவினையுளைச் செய்வாராய், தக்காராய், தாழ்விலாச் செல்வராய் விளங்கியவராதலின், கொச்சி நாட்டை எல்லாவகையிலும் வளம்படுத்தினர். மக்களும் மன்னரும் மிக்கவே புகழ்ந்தனர். மன்னர் மாண்புசேர் 'மகாவீரர்' என்னும் பட்டம் நல்கினர். நம் அமைச்சர் நாவலந்தீவாம் இந்திய நாட்டில் எவரும் செய்யத் துணியாத முடிவிலாக் குடி-

யாட்சி முறையை மூனேந்து செய்து மன்னர்க்கும் மக்களுக்கும் என்றும் பொன்றாப் பெரும் புகழை எய்துவித்தனர்.

தமிழ்க் காதல்

ஆங்கிலம் திறம்படச் சொற்பொழிவாற்றும் வல்லார் சிலருள் இவரும் ஒருவர் என்பது எவரும் அறிந்ததே. வெளி நாட்டவரும் வியக்கும் நாவன்மைமிக்க சண்முகனர், ஒருகால் சிற்றார் ஒன்றில் தமிழில் சொற்பொழிவாற்ற நேர்ந்தது. அப் பொழுது புலம்பெயர் வேற்றுமொழியாளரைப் போல் பேச இயலாது கூசி நின்றனர். அன்று முதல் தமிழ்கற்க ஆர்வங் கொண்டு சிறந்த புலவர்கள் பலரைத் தம்முடன் வைத்துக் கொண்டு தளரா ஊக்கத்துடன் வரன்முறையாகத் தமிழ்நூல் கள் அனைத்தையும் கற்றுத் தேறினர். திருமுறைப் பண்களும் அப்பண் வல்லார் வழியாகச் செவ்வையாகத் தேர்ந்தனர். கால முண்டாகவே, கன்னித் தமிழைக் கற்றுக் கசிந்துருகி இன்புறும் பேறு பெற்றோம் இல்லையே என்று தனிமிகக்கொண்டு நனிமிக வருந்தினர். எனினும் காதல் மீதூர்தலினல் இளஞரினும் இளஞராய்ப் பிற்றைநிலை முனியாது விழைந்து கற்று விழுமிய புலவராயினர். சாலச்சிறந்த நூலாசிரியர் உரையாசிரியர் முதலிய பலநிலையும் ஒருங்கெய்தினர்.

தமிழுக்கும் தமிழிசைக்கும் தனிப்பெருந் தந்தையாய் விளங்கி ஒல்லும் வகை காத்து வருகின்றனர். ஒல்லாப் பகைஞர் வில்லேருழவர் எனினும் அஞ்சாது சொல்லேருழவராய்ப் புல்லாரும் நல்லாராகப் போற்றும் பொறுமையுடன் நற்றொண் டாற்றி வருகின்றனர். சீரியதொண்டு நீடுவாழ்வதாக.

திருமுறைப்பேரன்பு

டாக்டர் சண்முகனர் வழிவழியாகச் சிவனடிமைத் திறத் திலும் திருமுறையிலும் தவலரும் பற்றுமிக்க சிவநிறை குடும் பத்துத் தவச்சிறப்பால் தோன்றியவர். அகநிறை அன்பு மிக்கவர். நடிக்கும் படிப்புமுறை அவர்பால் இன்று. அதனல் அவர்தம் அகம்நிறை உண்மை அன்பு, எண்மையில் புறத்துப் புலனுகாதமைந்தது. புலனும் காலம்வரப் புலனுயிற்று.

போரூடு அமெரிக்கா புகல்

செர்மானிய உலகப்போர் தீயென மூண்டு கண்டாரும் கேட்டாரும் அண்டற்கரிய அச்சத்தராய், 'எச்சமும் யாமும் என்செய்வாம், எங்குச் செல்வாம்' என்று கண்ணிமையாது ஏங்கி இரங்கிச் சோரும் நண்ணரிய அந்நாளில், ஆட்சியாளர்